


# JAMAAT UL SAHIH AL ISLAM – TAMIL NADU



ஹஸ்ரத் கலீப்.்.த்துல்லாஹ்
முனீர் அஹ்மது அஸீம் (அலை)

ஜுமுஆ பேருரை

தலைப்பு :

## கண்ணியமிக்க இரவு மற்றும் இ.்.திகாப்

**08 May 2020**

**(14 Ramadan 1441 AH)**


வெளியீடு

அமீர்,

ஜமா அத் தமிழ்நாடு

**Phone No :- 917502272774**

بسم الله الرحمن الرحيم

# *The Night of Destiny and Spiritual Retreat*

## கண்ணியமிக்க இரவு மற்றும் இ.்.திகாப்

உலகனைத்திலும் உள்ள தனது தோழா்களுக்கும் மற்றும் எல்லா முஸ்லீம்களுக்கும் ஸலாத்தினைத் தெரிவித்துக்கொண்டு, தஷஹ்ஹுத், தஅவ்வூது மற்றும் அல்.்.பாத்திஹா ஓதியபிறகு **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜுமா பேருரையியை நிகழ்த்தினார்கள்.

அல்லாஹ் தனது எல்லையற்ற ஞானத்தால் தனது படைப்பினங்களுக்கு இவ்வுலகில் கண்ணியமான வாழ்க்கையை பெறுவதற்கும், மறுமையில் மகிழ்ச்சியான நிரந்தர வாழ்வை பெறுவதற்கும் மாற்றத்திற்கு உட்படாத சில விதிமுறைகளை விதித்துள்ளான்.

இந்த நடைமுறைக்கேற்ப நம்பிக்கை கொண்ட மக்களுக்கு அவன் கடமையாக்கியுள்ள அமல்களில் ஒன்று நோன்பு ஆகும். நோன்பு நோற்பது என்பது உணவை மட்டும் தவிர்ப்பது அல்ல. மாறாக நமது உடல் உறுப்புக்கள் அனைத்தையும் குறிப்பாக நாவை கட்டுப்படுத்தி அதன் ஆதிக்கம் செலுத்திவிடாமல் தடுப்பதாகும்.

நோன்பு நோற்பதன் மூலம் பெறும் ஆன்மீக பயிற்சியானது மனிதன் தனக்கு இன்றியமையாததாகத் தோன்றும் ஒரு காலத்திற்கு அவா் தன்னை சுயம் இழக்க வைக்கும் திறனை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதாகும். இந்த களத்தில், பலரைப் போலவே, ஒரு விருப்பம் இருந்தபோதிலும், அதைச் செய்ய அவருக்கு அதிகாரம் இருந்த போதிலும் தனது நோக்கம் உறுதியானது என்றும் நாடுவது அல்லாஹ்வின் மகிழ்ச்சி என்றும் அவா் நிரூபிக்க வேண்டும். இத்தகைய

வழிபாட்டுச் செயலின் நோக்கம் ஒரு தனி நபரின் மேன்மையை விட, இறைவனின் அளவுகோலின்படி இறைவன் மீதான அவரது பயபக்தியை தேடுவதாக தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. அதன் தரத்தை அளப்பதற்கு அதற்கு சாட்சயமளிக்கும் படைப்பினங்கள் மூலமே முடிகிறது.

நோன்பு நோற்பின் பாடசாலையானது நிகரற்றதாக இருப்பதால் இது அனைவருக்கும் அமைதிக்கு வழி வகுக்கவேண்டும். மற்றவர்களில் அதிக்கம் செலுத்துவதற்கான போக்கு, தோற்றமளித்தல், இறைவனைத் தவிர மற்றவர்களுக்கு அஞ்சுவது மற்றும் மனித இனத்தின் ஒரே உண்மையான எதிரியான சாத்தானுடைய தீமையின் அழைப்பின் அனைத்து நய வஞ்சக வடிவங்களுக்கும் எதிராக நிலை கொள்ள வேண்டும்.

நோன்பு மாதம் அனுமதிக்கும் பட்ட சான்றிதழ் என்பது மிக அற்பமான பூமிக்குரிய தங்குமிடத்தில் நம்பிக்கையாளரை வளர்க்கும் நல்லொழுக்கங்களின் கூட்டுத் தொகையாகும். இறைவனிடம் திரும்புவது மட்டுமே முடிவடையும் சோதனைகளின் தொகை என்பதை நினைவில் கொள்வோம்.

பொருள் ஒரு புனிதமான அளவீடாக மாறும் உலகில், சக்தி வாய்ந்த கருத்தை முன்னோக்குக்குக் கொண்டு வருவதற்கும், அதை விரும்புவோருக்கு வழங்குவதற்கும் ரமலான் மாதத்தின் நோன்பு உள்ளது. உண்மையில் நோன்பு என்பது நம்பிக்கையாளர்களுக்கு ஒரு கேடயம் ஆகிறது.

ரமலான் மாதத்தின் நோன்பானது இஸ்லாம் கட்டப்பட்ட ஐந்து அடிப்படை அடித்தளங்களில் நான்காவது ஆகும். திருக்குர்-ஆனின் இந்த வசனம் வெளிப்பட்டதைத் தொடர்ந்து, ஹிஜ்ரா இரண்டாம் ஆண்டில் முஸ்லீம்களுக்கு நோன்பு கடமையாக்கப்பட்டது. **“நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் முன்னோருக்கு நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் ஆன்மீக நல்லொழுக்க பலவீனங்களிலிருந்து தவிர்த்து கொள்ளலாம்” (2 : 184)**

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

“இது பொறுமையின் மாதமாகும். பொறுமையின் கூலி சொர்க்கமாகும். இது நம்பிக்கையாளர்களின் அருள்வளங்கள் அதிகரிக்கும் மாதமாகிறது. இந்த

மாதத்தின் ஆரம்பமானது கருணையுடையது. அதன் மத்திய பகுதியானது மன்னிப்பினுடையது. அதன் இறுதி பகுதியானது நரக நெருப்பிலிருந்து மீட்ச்சியுடையதும் ஆகிறது.”

லைலத்துல்கத்ர் அசாதாரணமான மற்றும் அருளுக்குரிய ஓர் இரவாகிறது. அதன் நன்மைகளைத் தேட முயற்சிக்கும் நேர்மையான ஊழியர்களுக்காக அது ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்விரவானது ஆயிரம் மாதங்களை விடச் சிறந்ததாகும்.

நபிகள் நாயம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

**“கண்ணியமிக்க இரவை நம்பிக்கையுடனும், வெகுமதியின் எதிர்ப்பார்ப்புடனும் பக்தி மிக்க விழிப்புணர்வுடனும் கழிப்பவருக்கு கடந்த கால தவறுகள் அனைத்தும் மன்னிக்கப்படும்”.** (முஸ்லீம்)

திரு நபி (ஸல்) அவர்கள் கூறினார்.

ரமலானின் கடைசி பத்து நாட்களின் ஒற்றைப் படை இரவுகளில் ஒன்றில் கண்ணியமிக்க இரவை எதிர்பாருங்கள். அதாவது ரமலானின் 21, 23, 25, 27 அல்லது 29 –ஆம் இரவில் நீங்கள் அதை எதிர்பாருங்கள். கண்ணியமிக்க இரவில் இவ்வாறு துஆ செய்யுமாறு திரு நபி (ஸல்) அவர்கள் பரிந்துரைக்கிறார்கள்.

**“அல்லாஹும்ம இன்னக்க அப்புவாவுன் துஹிப்புல் அப்வாபாபு அன்னீ.”**

**“எனது இறைவா, நீ மன்னிப்பவனாக இருக்கின்றாய், நீ மன்னிக்க விரும்புகின்றவனாக இருக்கின்றாய், எனவே என்னை நீ மன்னிப்பாயாக.”!**

(மிஸ்காத், இப்னுமாஜா, தீர்மிதி)

கண்ணியமிக்க இரவைத் தேடுவதற்காக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவரது தோழர்கள், அவரது மனைவிகள் மற்றும் ஆரம்பகாலத்திலிருந்து இன்றுவரையுள்ள நம்பிக்கையாளர்கள் இ∴திகாப் இருக்கின்றனர். திருநபி (ஸல்) அவர்கள் ரமலானின் கடைசி பத்து நாட்களில் இ∴திகாப் இருந்தார். அவர் வபாத்தாகும் வரை அதாவது அவர் வபாத்தான ஆண்டுவரை தொடர்ந்து அவ்வாறு செய்தார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**“பள்ளிவாயில் ஒவ்வொரு பக்தியுள்ள மனிதனுக்கும் அடைக்கலமாகும். அங்கு இ.ீதிகாப் இருப்பவருக்கு அமைதி கருணை மற்றும் சொர்க்கத்தில் அவனுடைய கிருபையை பெற முடியும் என்றும் இறைவன் வாக்குறுதி அளித்துள்ளான்.”**

ரமலானின் கடைசி பத்து நாட்கள் நம்மை நெருங்கி வருகின்றன. முதலாவதாக, ரமலான் இரவில் உடல் ரீதியாகவும், இரண்டாவதாக அல்லாஹ்வின் தூதரின் முழுவாழ்க்கையிலும் மனித குலத்தின் வழிகாட்டுதலுக்காக தெய்வீக வெளிப்பாடுகளின் வடிவத்தில் இறை அருள்கொடைகளை பரப்புவதற்காக பரிசுத்த ஆவி அல்லாஹ்வின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரிடம் இறங்குகிறது. ஆகையால், இந்த ஆசீர்வதிக்கப்பட்ட இரவு, அல்லாஹ் அதை உங்களுக்காக இந்த இரண்டு வழிகளில் ஒதுக்கியுள்ளான். ஏனென்றால், ஒவ்வொரு நாளும் அல்லது ஒவ்வொரு ஆண்டும் ஒரு நபர் அல்லது ஒரு தேசம் அல்லது உலகம் முழுவதுமாக, அல்லாஹ்விடமிருந்து நற்செய்தி மற்றும் எச்சரிக்கைகளை பெற்று அவர்களுக்கு வழங்குவதற்காக ஒரு இறைத் தூதரின் வருகையை சாட்சியமளிக்கிறது.

இந்த அருளுக்குரிய இரவு மற்றும் பகலில் வாழ்பவர்கள் அனைவரும் அதிர்ஷ்டசாலிகள். இருளில் மூழ்கியிருந்த ஒரு சகாப்பதம். ஆனால் அது இறைத்தூதரின் வருகையால் புத்துயிர் பெற்றது. மக்களுக்கு ஒரு உண்மையான வழிகாட்டியாக இருக்கும் அத்தகைய தூதர் இறை வெளிப்பாடுகள் மற்றும் அறிவுறுத்தல்கள் மூலம், அவர் எச்சரிக்கைகள் மற்றும் தீர்க்கதரிசனங்களை செய்கிறார்.

உண்மையிலேயே நேர்மையானவர்களையும் நேர்மையற்றவர்களையும் அல்லாஹ் நன்கு அறிவான். மேலும் 2020 மே 5-ம் தேதி எனது செய்தியில் நான் கூறியது போல், நேர்மையானவர்கள் என்றாலும், அவர்கள் இறக்கும் தருணம் கட்டளையிடப்பட்டால் மரணம் தவிர்க்க முடியாது என்பதால் நிச்சயமாக அவர்கள் இறந்து விடுவார்கள். ஆனால் அவர்கள் அல்லாஹ்வின் மகிழ்ச்சியிலும் அவனுடைய சொர்க்கத்திலும் மீண்டும் நித்திய முழுமையுடன் வாழ்கிறார்கள்.

அதனுடன் நேற்று, 2020 மே 7 –ம் தேதியன்று எனது அன்பான தோழர் சலீம் சாஹிபின் தந்தை இறந்த சோகமான செய்தியை நான் அறிவிக்கிறேன். அவர் பெயர் காஜா மொய்தீன். அவருக்கு 83 வயது. 2018 –ம் ஆண்டில் நான்

இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்ட போது, நான் அவரை சந்தித்தேன். இந்த சந்திப்புக்குப் பிறகு அவர், தனது மகன்கள், அவரது மனைவி மற்றும் அவரது முழு குடும்பமும் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமில் ஒருங்கிணைய முடிவு செய்தனர். அவரது ஒரு மகளைத் தவிர! சரியாக ஒருவருடம் முன்பு, அவர் கடுமையாக நோய்வாயப்பட்டார். அவருடைய உடல்நிலை குறித்து அன்று அவரது குடும்பத்தினர் எனக்கு தெரிவித்தனர். அவர் குணமடைந்தபோது ஒரு அதிசயத்தைக் கண்டார். **அல்ஹம்துலில்லாஹ்** ஒப்புக்கொண்டபடி, இது அல்லாஹ்விடமிருந்து ஒரு மீட்பு மட்டுமே, சரியாக ஒரு வருடம் கழித்து, (மேய் 07, 2019 – 2020) அவருடைய நேரம் வந்துவிட்டது, அல்லாஹ் அவரை அவன் பக்கம் அழைத்துக் கொண்டான். **இன்னில்லாஹி வா இன்னா இல்லாஹி ராஜியூன்.**

(காஜா மெய்தீன் சாஹிப் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட செய்தியைப் பெறுவதற்கு முன்பே 2020 மேய் 06 –ம் தேதியன்று சலாத்துல் பஜ்ர்-க்கு பிறகு ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் கண்ட ஒரு கனவைப் பற்றி கூறினார்கள். மக்கள் கூடிவருவதை அவர் கண்டார். ஒரு சிலர் ஊதா நிற ஆடைகளில் மூடியிருந்த ஒருவரை அவர்களுடன் அழைத்து செல்ல அவர்கள் அவரின் கையைப் பிடித்தனர். அப்போது கலீ.ஃ.பத்துல்லாஹ் அவர்களைத் தடுத்து, இந்த நபரை எங்கே அழைத்துச் செல்கிறீர்கள் என்று கேட்டார், மேலும் இந்த நபர் என்னுடன் இருந்ததால் அவரை விட்டு செல்லும்படி கூறினார்கள். ஆனால் அவர்கள் மீண்டும் மறுத்து, அவரை அவர்களுடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள். இந்த நபர் தன்னுடன் இருப்பதாகவும், அவரைத் திருப்பித் தரும்படியும் கலீ.ஃ.பத்துல்லாஹ் மேலும் வலியுறுத்திக் கூறினார்கள். ஆனால் அவர்கள் அதை மீண்டும் மறுத்து, அவரைத் திருப்பித் தர முடியாது என்று கூறினார்கள். திடீரென்று அந்த நபரை மூடிய ஊதா ஆடை அல்லது துணி மாறி, அது வெள்ளை சட்டை மற்றும் பேன்ட் ஆனது, கலீபத்துல்லாஹ்வை பொறுத்தவரை அவர்கள் அவர்களுடன் அழைத்து செல்வது ஒரு இளைஞரையாகும். அந்த நேரத்தில் துரதிர்ஷ்டமான ஏதோ ஒன்று நிகழப் போகிறது என்று கலீ.ஃ.பத்துல்லாஹ்வுக்கு தெரியும். ஏதோ இளைஞருக்கு ஏதேனும் துரதிர்ஷ்டம் ஏற்படும் என்று அவர் நினைத்தார்.)

அன்று இரவில், தராவீஹ் தொழுகைக்குப் பிறகு மொரீஷியஸ் உள்ளூர் நேரம் சுமார் 10 – 10.30 மணியளவில் காஜா மெய்தீன சாஹிபின் மகன்

கலீ∴பத்துல்லாஹ்வுக்கு போன் செய்து, தனது தந்தையின் உடல்நிலை மிகவும் மோசமாக இருப்பதாகவும், அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் கூறினார்.

நிச்சயமாக, நாம் அனைவரும் அல்லாஹ்விடமிருந்து வந்தோர்களும் அவனிடமே திரும்புபவர்களும் ஆவோம். அவர் நோய்யால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். ஆனால் கொரோனா வைரஸால் மாசுபட்டதால்தான் நோய்தீவிரமாகிவிட்டது என்று இந்தியா (தமிழ்நாடு) அரசு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த பயங்கரமான வேதனையில், அவரது பரிவாரங்கள், ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் அல்லாத அஹமதிகள் ஒரு வேதனையான மரணம் குறித்த செய்தியால் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேலும் எனது அன்பான தோழர் சலீம் சாஹிப்பைக் குற்றம் சாட்டுவதில் தீங்கிழைக்கும் மகிழ்ச்சியைப் பெறுகிறார்கள். அவரது தந்தை உட்பட அவரது முழுகுடும்பத்தையும் ஒளியில்லாத பாதையில் வழிநடத்தினார் என்று ஆட்சேபனை செய்கின்றனர். அதே நேரத்தில் பிளேக் வெளிபட்ட போது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்கள் மற்றும் அவரைப் பின்பற்றுபவர்களுக்கும் அதே சிகிச்சை அளிக்கப்பட்டதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். அஹமதிகள் பிளேக்கால் பாதிக்கப்பட்டு இறந்தார்கள் என்பதை வாக்களிப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உறுதிப்படுத்தியதை அவர்கள் மறந்துவிட்டனர். மேலும் காதியான் காப்பாற்றபடும் என்று கூட அவர் சொல்லியிருந்தார். ஆனால் அது அவ்வாறு நடக்கவில்லை. இது எல்லா வகையிலும் அஹமதியா சமூகத்தின் கருத்திற்கு சேர்ந்ததல்ல. அந்நிலையில் நான் மஸீஹ் மற்றும் இறைத்தூதர் என்று அவரது வாதம் தவறானது. நவுது பில்லாஹ். **(சான்றாதாரம் ஹக்கிஹத்துல் வஹி ஆங்கில பதிப்பு பக்கம் 713, வெளியீடு, அஹ்மதியா முஸ்லீம் ஜமாஅத்து).**

மேலும் அவர்களின் ஆன்மீகத் தலைவர் கூட கோவிட் -19-ஆல் பாதிக்கப்பட்ட தனது உறுப்பினர்களின் மரணத்தை அறிவித்ததை அவர்கள் மறந்து விடுகிறார்கள். இதில் முஸ்லீஹ் மவ்வூத் அவர்களின் காலத்திலிருந்து கலீ∴பத்துல் மஸீஹுகளுக்கு சேவை புரிந்து வந்த வயதான ரானா நயீமுத்தீன் சாஹிப்பும் உட்படுவார். அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். ஆனால் அவர்களுடைய இத்தகைய எள்ளி நகையாடல்களைத் தூக்கி வீசிவிட்டு, அவர்களை துரதிர்ஷ்டவசமான

நிலைமைக்கு ஆளாக்கி துன்புறுத்துவதற்கு அல்லாஹ்வுக்கு எல்லா ஆற்றலும் இருக்கிறது என்பதை அவர்கள் மறந்து விடுகின்றனர். அவர்களின் துரதிர்ஷ்டத்திற்காக நான் பிரார்த்தனை செய்ய வேண்டாம் என்று நினைத்தேன். நிச்சயமாக என் நேர்மையான தோழர்களை எல்லா வகையான குற்றச்சாட்டுகளுடனும் குவிக்கும் இந்த மக்களைப் பற்றி நான் மிகவும் கவலைப்படுகிறேன். என் நேர்மையான தோழர்களைப் பற்றி நான் கவலைப்பட வேண்டாம். ஏனென்றால் அல்லாஹ் எல்லா நேரத்திலும் அவர்களைப் பாதுகாப்பான் என்று நான் முழுமையாக நம்புகிறேன், காரணம் அவர்களின் தினசரி வாழ்க்கையில் பல வழிகளிலும் அது வெளிப்படுகிறது. நிச்சயமாக, கலீ.ஃபத்துல்லாஹ்வை போலவே எல்லா வகையான சோதனைகளையும் அவர்கள் சந்திப்பார்கள். ஆனால் நேர்மையான இதயங்களும், இறை ஒளிக்காக தாகம் கொள்பவர்களும் விரைவில் நம்முடைய உண்மைத் தன்மையை உணர்ந்து விடுவார்கள்.

நேற்று, சுமார் 2.50 மணியளவில் தனது தந்தையின் மிக மோசமான உடல்நலம் குறித்து சலீம் சாஹிப்புடன் பேசிய பிறகு, இந்த மிகவும் வேதனைக்குரிய நேரத்தில் அவரது குடும்பத்தினருக்கும் அவருக்கும் பொறுமை வழங்குமாறு நான் இறைவனிடம் மன்றாடினேன். பொறுமைபற்றி அல்லாஹ் இந்த வசனத்தை எனக்கு வெளிப்படுத்தினான்.

**“பிஸ்மில்லாஹி ரஹ்மானிர் ரஹீம்”**

அல்லாஹ் கூறுகின்றான்,

**“பொறுமை, பிரார்த்தனை இவற்றின் மூலம் அல்லாஹ்விடம் உதவி கோருங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்” (2 : 154)**

அஸ்-ஸப்ர் : விடாமுயற்சி, பொறுமை மற்றும் சகிப்புத் தன்மை ஆகியவை இதயத்தின் கடமைகளில் ஒன்றாகும். அது ஆன்மாவை மெதுவாக்குவதோடு, அதன் விருப்பங்களை எதிர்க்கும் சகிப்புத்தன்மையை வழங்குகிறது, அல்லது இன்பங்களை கைவிட அது உதவுகிறது. சப்ர் மூன்று வகைகள் உள்ளன : கீழ்ப்படிதலாக அல்லாஹ் கடமையாக்கியதை கடைப்பிடிக்க வேண்டும். அல்லாஹ் நமக்குத் தடை விதித்தவற்றிலிருந்து பாதுகாக்கும் போது பொறுமையாக இருங்கள்.

1. அல்லாஹ் கட்டளையிட்டதைப் பின்பற்றுவதில் விடாமுயற்சியுடன் இருங்கள். அல்லாஹ் கட்டளையிட்ட மார்க்க கடமைகளைப் பின்பற்ற ஆன்மாவை கட்டாயப்படுத்துங்கள். அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் மீது உறுதியான நம்பிக்கையுடன் இருங்கள். அல்லாஹ்வின் தூதரை ஏற்றுக்கொள்ளுங்கள். வரவிருக்கும் பெரும் சிரமங்களின் போதும் அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் நீங்கள் செய்த பை-அத்தின் உறுதி மொழிகளை மதித்து நடந்துக் கொள்ளுங்கள்.

2. அல்லாஹ் என்ன விதித்திருக்கிறான் என்று காத்திருங்கள். அல்லாஹ் கட்டளையிட்டவற்றிலிருந்து திரும்பிவிடாதீர்கள். உங்கள் ஆன்மாவைக் கட்டுப்படுத்தவும், தடை செய்யப்பட்ட காரியங்களைச் செய்யாமல் இருக்கவும், மேலும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எதிராக தவறான வார்த்தைகளைச் சொல்லாமலிருப்பதற்கும் அல்லாஹ்வின் வழியில் நீங்கள் மேற்கொண்ட பிரார்த்தனை மற்றும் பிற விஷயங்களை கைவிடாமலிருப்பதற்கும் ஒரு பெரிய முயற்சி தேவைப்படுகிறது. நீங்கள் மிக உயரிய வெகுமதியைப் பெற அழகான முறையில் பொறுமையுடன் இருங்கள்.

3. சிரமங்களிலும் சோதனையிலும் சகித்துக் கொள்ளுங்கள். அதாவது அவரது ஆன்மாவைக் கலங்கச் செய்யும் விஷயங்கள் யாவை : துன்பம், வலி, வாழ்க்கை நிலைமைகளில் சிரமங்கள் அல்லது ஒரு துரதிர்ஷ்டம் காரணமாக மனிதனைப் பாதிக்கும் சோகம் (போன்றவற்றை சகித்துக் கொள்ளுங்கள்) இந்த தற்காலிக உலகின் வாழ்க்கையானது செயல்களுடைய இடம் என்ற நிலையில் இது உண்மையில் துன்பம் மற்றும் சோதனைகளின் உறைவிடமாகும். அதே நேரத்தில் மறுமையானது பொறுப்புக் கூறலின் தங்குமிடமாகும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நிச்சயமாக அல்லாஹ் கூறுகிறான், “கண்களின் பயன்பாட்டை இழப்பதன் மூலம் என் அடியாரை நான் சோதிக்கும் போது, அவர் பொறுமையுடன் காத்திருக்கிறார். அதற்கு பதிலாக நான் அவருக்கு சொர்க்கத்தை வழங்குகிறேன்”. அல்லாஹ்விடம் திருப்தி, அவனுக்குக் கீழ்ப்படிதல் என்ற பொருளில் அல்லாஹ்வை எதிர்காமலிருப்பதும், அவனது முன்னறிவிப்பு மற்றும் அவனது ஆணையில் திருப்தி அடைவதும் பொறுப்புள்ள ஒவ்வொரு நபரின் கடமையாகும்.

அல்லாஹ்வுடனான திருப்தி என்பது இதயத்தின் கடமைகளில் ஒன்றாகும். அல்லாஹ்விடம் மகிழ்ச்சி அடைவதற்கும், அவன் உங்களுக்காக கட்டளையிட்டதை ஏற்றுக்கொள்வதற்குமாக நாம் அவனுக்கு அடிபணிய வேண்டும் என்பதாகும். உண்மையில் சோதனைகளின் காலங்களில் பொறுமை இல்லாததால் பலர் பாவங்களில் வீழ்கிறார்கள். பின்னர் அவர்கள் இன்னும் கடுமையான பாவங்களில் சிக்கிக் கொள்வதன் விளைவாக அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதருக்கு எதிராக திரும்பி, இறைவார்த்தைகளை கேலி செய்கிறார்கள். இறைக் கப்பலில் உள்ள அனைவருக்கும் அதன் ஆன்மீக தலைவராக அல்லாஹ்வின் தூதர் இருப்பதால், அவர்களை பொறுமையுடையவர்களாக அலங்கரிப்பதற்கும், அவர்களின் ஆன்மாவை பொறுமையுடன் செயல்பட் பழக்கப்படுத்துவதற்கும் மேலும் முழுமையாக அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிவதற்கும், எந்த சூழ்நிலையிலும் அவன் மீது நம்பிக்கை வைத்து முன்செல்வதற்கும் முடிந்துவிடும்.

மொரீஷியஸ் உள்ளுர் நேரம் 4.05 மணியளவில் என் அன்பான தோழர் சலீம் சாஹிப் அவர்கள் தனது தந்தையின் மரணம் குறித்து எனக்குத் தெரிவிக்க என்னை அழைத்தார். அவரை ஆறுதல்படுத்தி ஊக்கப்படுத்திய பின்னர் சுமார் 4.20 மணியளவில் இந்த குர்-ஆனிய வசனங்களை நான் வெளிப்பாடுகளாகப் பெற்றேன்.

**Wa’ufaw-wizu amrii ilallaah. Innallaaha Basiirum bil ibaad.**

**நான் என் விவகாரத்தை அல்லலாஹ்விடம் ஒப்படைக்கிறேன். நிச்சயமாக அல்லாஹ் தன் அடியார்களை கவனித்துப் பார்ப்பவனாக இருக்கிறான்.**

**Fasbir inna wa-dallaahi Haqqa**

**நீர் பொறுமையுடன் இருப்பீராக் நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது.**

**Laa yaguurannaka taqal lubullaziina kafaruu fil-bilaad.**

**அவ நம்பிக்கையாளர்களின் தடையற்ற இயக்கத்தால் நீ பூமியில் ஏமாற வேண்டாம்.**

**Mataa-un-qaliil**

**அது அவர்களுக்கு ஒரு மோசமான இன்பமாக இருக்கும்.**

**Ibadur Allah Raheem-uk-Allah. Faskeem Billah.**

**அல்லாஹ்வின் அடியார்களே, அல்லாஹ்வின் கருணை உங்கள்மேல் இருக்கிறது. அல்லாஹ்விடம் உறுதியாக இருங்கள்.**

அவரது மூத்த மகன் ஷானாவாஸ் சாஹிப்பிடமிருந்து, காலையில் நான் பெற்ற அறிக்கை பின்வருமாறு :

**அஸ்ஸலாமு அலைக்கும் வா ரஹ்மத்துல்லாஹி பரக்காத்துஹு**

**அஸ்ஸலாமு அலைக்கும் ஹுஸுர்,**

**சுமார் 20 ஆண்டுகளாக எங்கள் தந்தை தனது இதயம் மற்றும் நுரையீரல் தொடர்பான நோய்க்கான மருந்துகளை எடுத்து வருகிறார். கடந்த இரண்டு நாட்களிலிருந்து நுரையீரலில் ஏற்பட்ட நோய் காரணமாக அவரது மூச்சுத்திணறல் அதிகரித்தது. பின்பு இந்த பூட்டுதல் (Lockdown) சூழ்நிலையில் அரசு மருத்துவமனையில் அனுமதிப்பதைத் தவிர வேறு வழியில்லாததால், நாங்கள் 2020 மே 6 –ம் தேதியன்று அவரை அரசு மருத்துவமனையில் அனுமதித்தோம். மே 7 –ஆம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் அவர் காலமானார்.**

**அவர் மருத்துவமனையில் இருந்போது, கொரோனா பரிசோதனையின் முடிவுகளைப் பெற்ற பிறகு மட்டுமே சிகிச்சையைத் தொடங்குவார் என்று மருத்துவர்கள் கூறினார்கள். அது வரையில் அவருக்கு சில முதலுதவி (first aid) மட்டுமே அளிக்கப்பட்டது. அவரது சளியில் இரத்த உறைவைக் கட்டதும் அவருக்கு கொரோனா (கோவிட் -19) இருப்பதாக அவர்கள் முடிவு செய்தனர். பின்னர் அவர்கள் அவருக்கு ஆக்ஸிஜன் கொடுப்பதை நிறுத்திவிட்டு, அவரை மதியம் 1 மணியளவில் கொரோனா தனிமைப்படுத்தும் வார்டுக்கு அழைத்துச் சென்றனர். சுருக்கமாக அவர் காலமானார். (இனலில்லாஹ்)**

**பிற்பகல் 2.30 மணியளவில் அஹ்மதியா முஸ்லீம் ஜமா அத்தின் அக்பர் அலி சாஹிபிடம் கபர்ஸதானில் இடம் ஒதுக்க உதவி கேட்டேன். அவர் என்னிடம் என் தந்தையின் சுகாதார நிலைமை பற்றி கேட்டார். பின்னர் அவர் ஜமாஅத் உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். தொடர்ந்து அவர்கள், கூறினார்கள், “காஜா மெய்தீன் சாஹிப் சுமார் இரண்டு ஆண்டுகளாக எங்கள் ஜமாஅமத்தில் இல்லை. அவர் ஜும்மா தொழுகைக்கு கூட வருவதில்லை, மேலும்**

அவருக்கு கொரோனா தொற்று இருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. முடிவெடுக்க எங்களுக்கு காதியானிலிருந்து அனுமதி பெற வேண்டும். அதற்கு தாமதமாகிவிடும், நீங்கள் வேறு எங்காவது முயற்சி செய்யுங்கள்.

சுமார் 3 மணியளவில் அரசாங்க சுகாதார அதிகாரி என்னை தொடர்பு கொண்டார். நாங்கள் எங்கள் இடத்தில் (அதாவது வி-கே-புரத்திலுள்ள சிராஜ் முனீர் மஸ்ஜித் பகுதியில்) அடக்கம் செய்ய அனுமதி கேட்டோம். அவர் அனுமதி மறுத்து, இந்த சூழ்நிலையில் எங்களால் அவ்வளவு தூரம் செல்ல முடியாது என்றும், உங்கள் அருகிலுள்ள கபர்ஸ்தானில் அடக்ம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் கூறினார். அதை தொடர்ந்து அரசாங்க அதிகாரிகள், அரசியல் வாதிகள் அஹமதியா ஜமா அத் உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். ஆரம்பத்தில் அவர்கள் மறுத்த போதிலும், பின்னர் அவர்கள் அனுமதி அளித்து அவர்கள் குதாம்களை (முாரனாயஅள) அனுப்பினர், அவர்கள் முழு ஆதரவையும் அளித்து, அடக்கம் செய்ய நிறைய உதவினார்கள். இரவு 9 மணியளவில் நம்முடைய ஜமாஅத்தின் சகோதரர்கள் மற்றும் அஹ்மதியா ஜமா அத்தின் குதாம்களின் உதவியுடன் அரசு அதிகாரிகள் முன்னிலையில் அவரது அடக்கம் மிக நல்ல முறையில் செய்யப்பட்டுள்ளது.

எனது தந்தையின் மஹ்பிரத்துக்காகவும், எங்கள் குடும்ப நலனுக்காகவும் மேலும் நாங்கள் ஈமானில் உறுதியுடன் இருப்பதற்காகவும் தூஆ செய்யுமாறு நான் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

வச்சலாம்,
கெ. ஷனாவாஸ்
நிதி செயலாளர்
சலீம் சாஹிபின் சகோதரர்

அவரது மகனும் மேலேப்பாளையம் ஜமா அத்தின் தர்பியத் செயலாளருமாகிய நசீர் சாஹிபின் தலைமையில் ஜனாஸா தொழுகை நடைபெற்றது. அவருடன் அவரது குடும்பத்தைச் சேர்ந்த சிலரும் ஜமாஅத்தின் உறுப்பினர்களும் இருந்தனர்.

இந்த இடத்தைச் (மேலேபாளயம்) சேர்ந்த அஹ்மதியா ஜமா அத்தின் அமீர், அரசாங்க அதிகாரிகள் அவருடன் பேசிய பிறகு மிகவும் நல்ல ஒரு முடிவை எடுத்ததை நாங்கள் பாராட்டுகிறோம். அல்ஹம்துலில்லாஹ்.

ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) ஆகியோரின் போதனைகளுக்கு உகந்தவாறு தனது பணியில் நேர்மையாக இருக்க அல்லாஹ் அவருக்கு உதவி புரிவானாக. ஆமீன். இந்த இறுதி சடங்கிற்கு மிக நல்ல முறையில் உதவி அளித்த இந்த பகுதியிலுள்ள குதாமுல் அஹ்மதியாவின் உறுப்பினர்களுக்கு நான் நன்றி கூறுகிறேன். எங்கள் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்களுக்கு அவர்கள் வழியை திறந்ததைப் போலவே அல்லாஹ் அவர்களுக்கான வழியைத் திறந்து அவர்களுக்கு உதவி புரியட்டும். (ஏனென்றால் எல்லோரிடத்திலும் அன்பு எவர்மீதும் இல்லை பகைமை என்னும் அவர்களின் ஆன்மீகத்தை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்) ஆமீன்.

அல்லாஹ் தனது ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமையும், அவனது பக்தர்களையும் தொடர்ந்து பாதுகாப்பதோடு இம்மையிலும் மறுமையிலும் அவர்களின் நிலைமை உயர்த்துவானாக. அல்லாஹ் தனது அடியார்களிடம் இரக்கம் காட்டுவததோடு, அவனுடைய படைப்பினங்களின் தீமைகளிலிருந்து அவர்களுடைய நம்பிக்கையை பாதுகாப்பானாக! ஆமீன்.

ஜும்ம தொழுகைக்கு பிறகு, மர்ஹூம் காஜா மொய்தீன் சாஹிபின் ஜனாஸா தொழுகை என் தலைமையில் நடைபெறும். அல்லாஹ் அவருடைய எல்லா தவறுகளையும் பலவீனங்களையும் மன்னிப்பானாக! அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் மீது நம்பிக்கையாக இருந்ததற்காக அவருக்கு வெகுமதி அளித்து, ஜன்னத்துல் ஃபிர்தவ்சில் ஒரு உயர்ந்த இடத்தை அவருக்கு வழங்குவானாக. ஆமீன்.

அல்லாஹ் அவரது குடும்பத்தினருக்கு தனது பாதுகாப்பையும் அருட்கொடைகளையும் வழங்குவதோடு, இந்த வேதனைக்குரிய நேரத்தில் அவர்கள் அனைவருக்கும் ஆரோக்கியம், தைரியம், பொறுமை மற்றும் அமையையும் அளிப்பானாக! ஆமீன்.

## Translated by:

Naib Amir

# Azim Ahmad

<u>**Editing & Publishing are done by:**</u>

**AMIR**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**TAMIL NADU**

**Ph. No: 917502272774**